DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S. No.133/2025

Plaintiff side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... அருள்ஜோதி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.03.2026**

முதல்விசாரணை:–

நான் வழக்கில் வாதி ஆவேன். பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அது என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானவை. 01.09.1993 தேதியிட்ட மாடசாமி என்பவர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ-1, 15.02.2022 தேதியிட்டு வாதியும், பிரதிவாதியும் பிறப்பித்துக்கொண்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ-2, 01.01.1992 முதல் 03.02.2025 வரையிலான வில்லங்கசான்றிதழ் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ-3, 13.02.2025 தேதியிட்ட நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ-4, 15.02.2025 தேதியிட்டு வா.சா.ஆ-4 அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ-5 பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.